[9th November 1966

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், கன்னியாகுமரி ஜில்லாவில் இந்த பரவன் இனத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் ஷெட்யூல்ட் வகுப்பினரைப் போல எல்லாச் சலுகைகளும் வழங்கப்படுகிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இதை மற்ற ஜில்லாக்களுக்கு விஸ்தரிக்காமல் இருக்க என்ன காரணம்?

கனம் திரு. பூ. கக்கன் : முன்பே இதைப்பற்றி விளக்கியிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லா ஏற்கெனவே கேரள ராஜ்யத்தில் இருந்தபோது அவர்கள் சலுகைகள் எல்லாம் பெற்று வந்தார்கள். கன்னியாகுமரியை இங்கே சேர்த்தபோது அங்கே எவ்வாறு பாக்வேர்ட், ஷெட்யூல்ட் க்ளாஸஸ் ஆகியவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டு வந்ததோ அதை அப்படியே கொடுக்கவேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் இருக்கிறது. அதன்படி கொடுக்கப்படுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பரவன் இனத்துக் குழந்தைகள், கிறிஸ்தவர்களாக இருந்தாலும் இத்தகைய ஸ்காலர்ஷிப் வழங்கினல் உத்தேசமாக எவ்வளவு செலவு ஆகலாம் என்று பரிசீலித்திருக்கிறதா? அதன் விவரத்தை அளிக்க முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : எத்தனை குழந்தைகள் இருக்கிறார்கள் என்று பார்க்கவில்லை. இருந்தாலும் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று தூத்துக்குடியில் மீனவர்க் குழந்தைகளுக்கு ஹாஸ்டலே வைத்து நடத்தி வருகிறோம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பரவன் இனம் மோஸ்ட் பாக்வேர்டைச் சேர்ந்தது. அந்தக் குழந்தைகள் கிறிஸ்தவர்களானாலும் கொடுக்க நினைக்கும்போது மோஸ்ட் பாக்வேர்ட் இனத்தைச் சேர்த்தே அரசாங்கம் பரிசீலிக்கிறதா? அல்லது பரவன் இனத்திற்கு மட்டும் கிறிஸ்தவர்களானாலும் கொடுக்க பரிசீலிக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியைப் பொறுத்த மட்டில் பதில் கொடுத்திருக்கிறேன். அது பற்றித்தான் பரிசீலனை செய்யப்படுகிறது.

STARRED QUESTIONS.

Theft of idols

* 531 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the temples in the State, from which thefts of idols have been reported during the past three years and the description of the said idols; and

(*b*) the steps proposed to be taken and measures to be adopted, to prevent recurrance of such thefts, in future ?

9th November 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A statement [a] is placed on the Table of the House.

(*b*) Circular instructions have been issued by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department to the Executive Authorities of Religious Institutions to preven the theft of fools in the temples, in the State Instructions have also been issued to the Executive Authorities of Religious Institutions to take flash light photos of the existing idols, in the temples and to keep copies thereof with them in safe custody, to prevent the substitution of the idols in the temples, by greedy persons in collusion with unscruplous temple servants and trustees and also to facilitate the identification of stolen idols, if they are recovered by the Police.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, சபை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கடந்த மூன்று ஆண்டுகளில் 44 கோவில்களில் சிலைகள் திருடு போயிருக்கின்றன என்று தெரிகிறது. ஆகவே, இதைத் தடுப்பதற்காகச் சிலைகளின் போட்டோ முதலியவற்றை எடுத்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக பதில் கூறினார்கள். இந்தச் சம்பவங்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதைத் தடுக்க தேவையான நடவடிக்கை இது வரையில் எடுத்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் இது போன்ற களவுகள் இதற்கு முன்னாலேயே நடந்து வந்திருக்கின்றன. நான் ஊகிப்பது என்ன என்றால் . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் கேள்வி போட வேண்டும்; பிரசங்கம் செய்யக் கூடாது.

திரு. து. ப. அழகமுத்து : தர்மகர்த்தாக்கள், அர்ச்சகர்கள் உடந்தையாக இருந்து செய்வதாகத் தெரிகிறது. அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமோ அவை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தக் களவுகள் நடக்க முக்கிய காரணமாக ஒருசில தர்மகர்த்தாக்களும் ஒரு சில ஊழியர்களும் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றாலும், இன்னொரு முக்கிய காரணம், நம் கோவில்களில் உள்ள விக்கிரகங்களின் மதிப்பை மற்றவர்கள் உணர்ந்திருக்கிறார்கள், வெளி நாட்டினரும் உணர்ந்திருக்கிறார்கள். அது தான் காரணம்.

திரு. சா. கணேசன் : முதல் அமைச்சர் அவர்கள் கூறியபோது இதைத் தடுப்பதற்காகப் புகைப்படங்கள் எடுத்து வைக்கவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அப்படி எடுக்கப்படுகிற புகைப்படங்கள் அந்த கோவில் நிர்வாகியின் அலுவலகத்தில் வைக்கவேண்டுமென்றும், மற்றொரு பிரதி என்டௌமென்ட் போர்டுக்கு அனுப்பவேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது மட்டும்

---

a Printed as Appendix I on page 881–891.

[9th November 1966

போதாது. இந்தப் படங்களையெல்லாம் கோவிலுக்குள் நுழைகிற வாயிலில் மாட்டிவைத்துவிட்டால் எத்தனை விக்கிரகங்கள் எங்கு எங்கு இருக்கின்றன என்று எல்லோருக்கும் தெரியும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நுழை வாயிலில் இம்மாதிரி படங்களை மாட்டி வைத்து விட்டால் படங்களே காணுமல் போய் விடலாம். சுலபமாகக் களவு செய்து விடலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : குறிப்பாக வெளிநாடுகளில் இந்த விக்ரகங்களை அதிக விலை கொடுத்து வாங்குவதன் காரணமாக இத்தகைய திருட்டுகளுக்கு ஒரு உணர்ச்சி ஏற்படுகிறது. ஆகவே, வெளிநாடுகளில் இத்தகைய விக்ரகங்கள் வாங்கும்பொழுது, நம்முடைய நாட்டு அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் வாங்கக்கூடாத அளவுக்கு, நம்முடைய நாட்டு மத சம்பிர தாயத்தை மதிக்கிற அளவுக்கு, வெளிநாட்டு அரசாங்கம் அதற் குரிய எக்ஸிக்யூடிவ் இன்ஸ்டிரக்ஷன்ஸ் போடுவதற்கு இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் மூலம் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட விக்ரகங்களை அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் வெளிநாடு களுக்கு அனுப்பக்கூடாது என்ற நிலைமை இப்பொழுது இருக்கிற சட்டப்படியே இருக்கிறது. இருந்தாலும், அதையும் மீறி திருட்டுத்தனமாக சில விக்ரகங்கள் போகலாம்.

திரு. சா. கணேசன் : படங்கள் திருட்டுப்போய்விடும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். படங்கள் போனல் அதனுல் பெரிய நஷ்டம் இல்லை. படங்களை கோவில் வாயில்களில் அமைத்து வைப்பதன் மூலம், கோவிலுக்குப் போகிற ஜனங்கள் அதைப் பார்ப்பார்கள். அவர்கள் கண்ணில் அந்தப் படங்கள் படும். அந்தப் படத்தை பார்த்துவிட்டு, என்ருவது சாமி விக்ரகம் காண வில்லை என்ருல், எங்கே என்று கேட்பதற்கு இது வழிவகை செய்யும். ஆகவே, இம்மாதிரி செய்வதற்கு அவசியம் முன்வர வேண்டும், அப்படி முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மக்கள் அசல் விக்ரகத்தை தரிசிப்பதற்காக கோவில்களுக்குச் செல்கிருர்கள். படத்தை மாட்டி வைப்பது என்று சொன்னுல் அந்த ஒரு முக்கியத்துவத் திற்கு பாதகம் ஏற்படலாம். படத்தைப் பார்த்துவிட்டு ஜனங்கள் திரும்பிவிடலாம்.

Electricity Board

* 532 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have directed the Madras State Electricity Board to submit the Employees Regulations with reference to the clerical employees for certification ?